# தமிழ்க் கட்சிகளின் அழைப்பில் இன்றைய தினம் வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் – முடங்கியது யாழ் நகர்




### தவணைப் பரீட்சைகளுக்காக மாணவர்கள் வரவு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 20

தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் ஹர்த்தால் போராட்டத்திற்கு யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு பூரண ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. இதனால், யாழ்ப்பாண நகரம் இயல்பு நிலையை இழந்திருந்தது.

இலங்கையின் நீதித் துறையிலிருந்து தமிழருக்கு நீதி கிடைக்காது என்பதை வலியுறுத்தியும், முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரீ. சரவணராஜா போன்ற நீதிபதிகள் அச்சுறுத்தப்பட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழலைக் கண்டித்தும், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சிங்கள பௌத்த மக்கள் வாழாத இடங்களில் தமிழ் மக்களின் இடங்களை அபகரித்து தொடர்ச்சியாக புத்த கோயில்கள் அமைப்பதைக் கண்டித்தும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் தமிழ் மக்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை பலவந்தமாக பறித்து சிங்கள மக்களை குடியேற்றுவதை எதிர்த்தும் இந்தக் கதவடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

2 ►

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 03 வெள்ளிக்கிழமை 20.10.2023 கதிர் 97

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## தென்மராட்சி நகரங்களும் இயல்பு நிலையை இழந்தன

வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற கடையடைப்பு போராட்டத்தால் யாழ்ப்பாணம் - தென்மராட்சியின் முக்கிய நகரங்கள் இயல்பு நிலையை இழந்தன.

அனைத்து தமிழ் தேசிய கட்சிகளின் அழைப்பின் பேரில் முன்னெடுக்கப்படுகின்ற வடக்கு கிழக்கு தழுவிய ஹர்த்தால் கடையடைப்பு போராட்டம் காரணமாக தென்மராட்சியின் பிரதான நகரங்களான சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் ஆகிய நகரங்களில் உள்ள மருந்தகங்கள் உணவகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் சந்தை தொகுதிகளும் முற்றாக

2 ►



## பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கஜன், சுலக்சனின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோரின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் இன்று நடைபெற்றது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கஜன், சுலக்சனின் நினைவுப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் நெவில்குமாரினால் நினைவுப் பேருரையும் ஆற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## மின் கட்டணம் அதிகரித்தது!

மின்சார கட்டணத்தை 18 வீதத்தினால் அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கமைய இன்று (வெள்ளிக்கிழமை) முதல் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

ஓராண்டில் மூன்றாவது முறையாக மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

மின்கட்டணத் திருத்தம் பின்வருமாறு அமையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

0-30 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 150 ரூபாவில் இருந்து 180 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குறித்த வகுப்பின் மின் அலகு ஒன்றுக்கான கட்டணம் 12 ரூபாவாகும்.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 300 ரூபாவில் இருந்து 360 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2 ►



## பருத்தித்துறையும் முழு கதவடைப்பு

யாழ்.பருத்தித்துறை நகர வர்த்தகர்களும் இன்று முழுமையாக கதவடைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகள் இயங்கியதோடு, அரச - தனியார் வங்கிகள், மருந்தகங்கள், உணவகங்கள் என்பன திறந்திருந்தன. (01)

## கிளிநொச்சி, மன்னாரும் ஹர்த்தாலால் முடங்கின



ஹர்த்தால் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்த நடவடிக்கைகள் முடங்கியுள்ளன. குறுந்தூர சேவைகளில் மாத்திரம் தனியார் பேருந்துகள் ஈடுபட்டுள்ளன.

அரச பேருந்துகள், ஏனைய அரச திணைக்களங்களின் சேவைகள் வழமை போன்று இடம்பெற்றுள்ளன. முச்சக்கர வண்டிகளும் சேவையில்

2 ►

## திருமலையில் மக்கள் நடமாட்டம் குறைவு



(ஹஸ்பர்)

முல்லை தீவு நீதிபதி டி.சரவணராஜாவுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை, மயிலத்தமடு மேய்ச்சல் தரை பிரச்சினை உட்பட சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராக இடம்பெறும் அநீதிகளைக் கண்டித்து

2 ►

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உலகின் சிறந்த விஞ்ஞானிகளின் தரவரிசையில் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து இருவர் தெரிவு



Prof. Navaratnaraja Sathiparan
Department of Civil Engineering
Faculty of Engineering



Dr.T.Mathanaranjan
Department of Mathematics and Statistics
Faculty of Science

அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகமும் Elsevier நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள உலகின் சிறந்த 2 வீத விஞ்ஞானிகளின் தரவரிசையில் முப்பத்தெட்டு இலங்கை விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் இலங்கையிலிருந்து உள்ளடக்கப் பட்டிருப்போரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் நவரட்ணராஜா சதிபரன், கலாநிதி ரி.மதனரஞ்சன் ஆகிய இருவரும் இடம் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பணிநாள் மற்றும் வருடாந்த அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பல்வேறு காரணிகளைக் கொண்டு தர வரிசைப் படுத்தி இந்தப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

22 அறிவியல் துறைகள் மற்றும் 176 துணைத் துறைகளில் இருந்து விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலில் இணைக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாதாம்!

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக தெரிவித்துள்ளார்.

அத்துடன் நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், காசா பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக உலக சந்தையில் அனைத்து எரிபொருள் வகையினதும் விலை, கிட்டத்தட்ட 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அடுத்த வருடம் ஜூன் மாதம் வரை அவசியமான எரிபொருளுக்கான டெண்டர் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. இலங்கை வரலாற்றில் முதன் முதலாக எமக்கு அவசியமான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக 200 மில்லியன் டொலர்கள் கையிருப்பை நாம் பேணிவருகின்றோம்.

மேலும், எரிபொருள் கொள்வனவுக்காக கடந்த காலங்களில் பெற்றிருந்த கடன்களை மீளச்செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் சுத்திகரிப்புப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம், என்று குறிப்பிட்டுள்ளார்.

## திருமலையில் மக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடகிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், திருகோணமலை நகரப் பகுதியில் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டதோடு, மாணவர்களை பெற்றார்கள் வந்து திரும்ப அழைத்துச் செல்கின்றமையையும் அவதானிக்க முடிந்தது.

ஒரு சில கடைகள் பூட்டப்பட்டிருந்தாலும், பல கடைகள் வழமை போன்று திறக்கப்பட்டிருந்தன. ஆயினும், மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

பொதுப் போக்குவரத்து வழமை போன்று இடம் பெற்றாலும் குறைவானவர்களே பயணத்தில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிந்தது.

## கிளிநொச்சி, மன்னாரும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளன.

மருந்தகங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய வர்த்தகச் செயற்பாடுகள் இடம்பெறுவதோடு சேவைச் சந்தை முழுமையாக முடங்கியுள்ளது.

அதேவேளை, மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளள. மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. தனியார் போக்குவரத்துச் சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அரச போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் இடம் பெற்றதோடு பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை வழமைபோன்று காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச அலுவலகங்கள் மற்றும் வங்கிகளின் செயல்பாடுகள் வழமை போல் இடம்பெற்றுள்ளன.

மன்னார் நீதிமன்றச் செயல்பாடுகள் இடம்பெற்ற போதும், சட்டத்தரணிகள் மன்றுக்குச் செல்லாமல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் ஹர்த்தாலுக்கு முஸ்லிம் மக்களும் வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின் கட்டணம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வகுப்பின் மின் அலகு ஒன்றுக்கான கட்டணம் 30 ரூபா.

61 முதல் 90 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 400 ரூபாவில் இருந்து 480 ரூபாவாகவும், 91 முதல் 120 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 1000 ரூபாவில் இருந்து 1180 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், 121 முதல்180 வரையான அலகுகளுக்கான நிலையான கட்டணம் 1,500 ரூபாவில் இருந்து 1,770 ரூபாவாகவும், 180 அலகுகளுக்கு மேல் நிலையான கட்டணம் 2,000 ரூபாவில் இருந்து 2,360 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை இந்த மின் கட்டண அதிகரிப்பு அமுலில் இருக்கும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (04)

## தென்மராட்சி நகரங்களும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டிருந்தன.

இதே வேளை தவணைப் பரீட்சைகள் இடம் பெறுவதால் பாடசாலைகளுக்கு மாணவர்கள் கிர மமாக செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தின் செயற் பா-டுகளும் சட்டத்தரணிகளின் புறக்கணிப்பால் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகரங்களில் உள்ள அரச, தனியார் வங்கிகள் வழமை போன்று இயங்கிக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட்டபோதும் உள்ளூர், வெளியூர்களுக்கான தனியார் பேருந்துகள் முற்றாக சேவையில் ஈடுபடவில்லை. (01)

## தமிழ்க் கட்சிகளின் அழைப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் பேருந்துச் சேவைகள் அனைத்தும் முடங்கியிருந்த நிலையில், இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துகள் ஆங்காங்கே சேவையில் ஈடுபடுவதையும், தவணைப் பரீட்சைகள் காரணமாக பாடசாலைகள் இயங்குவதையும் மாணவர்கள் வரவு கணிசமாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து சேவைகளும் முடங்கியிருந்தன.

இன்றைய போராட்டத்திற்கு வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் ஆதரவு வழங்குவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# அட்டாளைச்சேனை புறத்தோட்டம் கிராமத்தில் பாதை புனரமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்



(கே.எ.ஹமீட்)

கிறிசலிஸ் நிறுவனத்தின் உதவியுடன் அட்டாளைச்சேனை புறத்தோட்டம் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட பாதை புனரமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது.

புறத்தோட்டம் சனசமூக நிலையத்தின் தலைவர் யூ.எல்.சிப்லியா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி, அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபிர், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், கிறிசலிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அலிசா குணசேன, தொடர்பாடல் முகாமையாளர் தேசமன், கிழக்கு மாகாண நிழ்ச்சித்திட்ட முகாமையாளர் யூ.எல்.சம்சுதீன், தொழிநுட்ப ஆலோசகர் விமன்சா சொய்சா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பாதை புனரமைப்பிற்கான பதாதையினை அதிதிகள் திரை நீக்கம் செய்ததுடன் அதன் பின்னர் இடம்பெற்ற கூட்டத்தில் அதிதிகள் பலரும் உரையாற்றினர். இறுதியாக இடம்பெற்ற மக்களுடனான கலந்துரையாடலில் கிறிசலிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அலிசா குணசேன பங்கெடுத்தார்.

இங்கு புறத்தோட்டம் சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் பலரும் தமது கருத்துக்களை தெரிவித்ததுடன் சனசமூக நிலையத்தின் அபிவிருத்திக்காக உதவி செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர்.

அத்தோடு, சமூக, அரசியல், கல்வி, கலாசார நடவடிக்கைகளில் பெண்களின் ஈடுபாடு தொடர்பில் கருத்துக்கள் கேட்டறிந்து கொள்ளப்பட்டதுடன் பெண்கள் தலைமைதாங்கும் ஆற்றல்களை வளர்த்துக்கொள்வதற்கான வழி வகைகள் குறித்தும் இங்கு கருத்துக்கள் பறிமாறப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் பங்கேற்புடனான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வாய்க்கால்கட்டு பாதைக்கான புனரமைப்பு வேலைத்திட்டத்தை புறத்தோட்டம் சனசமூக நிலையம், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மேற்பார்வையில் மேற்கொண்டிருந்தது.

இப்பாதை வேலைத்திட்டத்திற்காக சுமார் 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டிருந்தது.

கிறிசலிஸ் நிறுவனத்தின் செயற்திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் மூன்று பிரதேச சபை பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு 15 சனசமூக நிலையங்கள் ஊடாக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மூலதனச்சந்தை திறந்த வினா விடைப்போட்டிச் சமர் 2023





(நூருல் ஹுதா உமர்)

இலங்கை பங்குப்பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆணையம் ஆகியன இணைந்து, மூலதனச் சந்தை தொடர்பான போட்டிகளை நாடு தழுவிய பல்கலைக்கழக ரீதியில் நடாத்தி வருகிறது.

அந்த வகையில், இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக பிரதான கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பீடங்களுக்கிடையிலான மூலதனச்சந்தை திறந்த வினா விடைப்போட்டிச் சமர் 2023 நிகழ்வில், ஐந்து பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு கொண்டனர். இதில் கலை கலாச்சார பீடம் முதலாம் இரண்டாம் இடங்களை தனதாக்கிக் கொண்டது.

பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா அவர்களின் தலைமையில், முகாமைத்துவ பீட நிதியியல் பிரிவு விரிவுரையாளர் எம்.சிறாஜி அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக இலங்கை பங்குப் பரிவர்த்தனை ஆணையம் சார்பாக நிரோஷன் விஜேசுந்தர, சஜீவனி பக்மெடினிய, நிமல் குமாரசிங்க, ஆர்.எம். சிவநாதன் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

நிகழ்வின் வரவேற்பு உரையை பேராசிரியர் ஏ.எம்.எம்.முஸ்தபா நிகழ்த்தினார். அறிமுக உரை கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் சிரேஷ்ட உப தலைவர் நிரோஷன் விஜேசுந்தர நிகழ்த்தினார். அவ்வுரையில் இலங்கை பொருளாதாரத்தில் பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் பங்களிப்பு மற்றும் போட்டி தொடர்பான விதிமுறை என்பன விளக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பிரதம அதிதி உரையை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில், இலங்கை மூலதன சந்தையானது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிரந்தர அபிவிருத்தியின் முக்கிய உந்து சக்தியாக அமைவதுடன், இன்றைய இளைஞர் சமூகம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மூலதன சந்தை தொடர்பான அறிவு, மற்றும் போட்டிச் சந்தை ஆய்வு தொடர்பான பல தகவல்களை வழங்குகின்றமை எமது தேசத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பாகும்.

அந்தவகையில் இலங்கை பங்குபரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை இணைந்து திறந்த வினா விடை போட்டிச் சமரை நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்களில் ரீதியில் நடாத்துவது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் எமது நாட்டின் மாணவர் சமுதாயத்தின் அறிவு, திறன் விருத்திக்கு மிக முக்கியமான பங்களிப்பாகும், என தகுறிப்பிட்டார்.

அதன் பின்னர் பீடங்களுக்கிடையிலான மூலதனச் சந்தை திறந்த போட்டிச் சமர் பீடங்களுக்கிடையிலான 15 குழுக்களுக்கிடையில் இடம்பெற்றது. கலை மற்றும் கலாச்சார பீடத்தின் பொருளியல் துறை அணிகள் முதலாம், இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் ரூபா 75,000 பணப்பரிசு மற்றும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டன. மூன்றாம் இடத்தினை தொழிநுட்ப பீடம் பெற்றுக் கொண்டது.

போட்டியில் முதலாமிடம் பெற்ற அணி தேசிய ரீதியில் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான இலங்கை பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு நடாத்தும் மூலதனச் சந்தை திறந்த வினாவிடைப் போட்டிக்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளது.




# காஸா உயிரிழப்பு 3,785 ஆக அதிகரிப்பு தொற்று நோய்களும் பரவும் அபாயம்!



தங்கள் மீது ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் 13 நாள்களாக தீவிர விமானத் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை நேற்றுவரை 3,785 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் விமானத் தாக்குதல் நடத்தத் தொடங்கியதிலிருந்து, இதுவரை 3,785 பேர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்களில் 1,524 பேர் சிறுவர்கள். சுமார் 1,000 பேர் பெண்கள். இது தவிர, இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 12,493 பேர் காயமடைந்துள்ளனர், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்குள் ஹமாஸ் படையினர் கடந்த 7 ஆம் திகதி நடத்திய தாக்குதலில் 1,400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும், தாக்குதலின்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹமாஸ் படையினர் கொல்லப்பட்டதாகவும் அந்த நாடு கூறியது. இந்த நிலையில், இஸ்ரேலுக்கும், ஹமாஸ்'க்கும் இடையிலான அண்மைக் காலப் போரின் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை ஆறாயிரத்தைக் கடந்துள்ளது.

இதுவரை இல்லாத அளவுக்கு தங்கள் நாட்டுக்குள் ஹமாஸ் நடத்திய இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக, கடந்த 12 நாள்களாக காஸா முழுவதும் இஸ்ரேல் ராணுவம் தீவிர வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது. மேலும், மக்கள் மிக நெருக்கமாக வசிக்கும் அந்த மிகச் சிறிய பகுதிக்கு மின்சார விநியோகத்தைத் துண்டித்த இஸ்ரேல் அரசு, உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத வகையில் அந்தப் பகுதியை முற்றுகையிட்டுள்ளது.

காஸா பகுதியில் குடிநீர் இருப்பு வெகுவாகக் குறைந்து வருவதால், அங்கு சுகாதார நிலை பேரழிவின் விளிம்பில் இருப்பதாக அந்தப் பகுதியில் இயங்கி வரும் 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' அமைப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பு கூறுகையில், போரால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் சிறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், குடிநீர் பற்றாக்குறையால் அங்கு நோய்கள் பரவி வருவதாகவும் தெரிவித்துள்ளது. போதிய குடிநீர் இல்லாததால் பாதுகாப்பற்ற நீர்நிலைகளிலிருந்து பொதுமக்கள் தண்ணீரை எடுத்துக் குடிப்பதாகவும், இதனால் பல்வேறு நோய்கள் பரவி மிகப் பெரிய சுகாதாரப் பேரழிவு ஏற்படவிருப்பதாகவும் அந்த அமைப்பினர் எச்சரித்தனர். தற்போது சுமார் 25,000 பேர் தங்கியிருக்கும் தங்களது முகாமில் 60 சதவீத குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

எகிப்து எல்லை வழியாக காஸாவுக்குள் நிவாரணப் பொருள்களை அனுமதிக்க இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளதையடுத்து, அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையால் சிக்கித் தவிக்கும் காஸா பகுதி அந்தப் பொருள்களுக்காக பரிதவிப்புடன் காத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தங்களது எல்லை வழியாக காஸாவுக்குள் உதவிப் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதற்கு எகிப்தும் ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கெனவே பல்வேறு பகுதிகளிலிருந்து உதவிப் பொருள்கள் எகிப்தில் குவிக்கப்பட்டுள்ளன. அந்தப் பொருள்களை காஸாவுக்குள் இஸ்ரேல் இன்று அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (04)

# 5 நிமிடத்திற்கு ஒரு குழந்தை மரணம் நாளொன்றுக்கு நூறுக்கும் அதிகம்!

## *அச்சுறுத்தும் காஸாவின் நிலைவரம்*



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையேயான போரில் அதிகம் பாதிப்படுபவர்களாகக் குழந்தைகள் இருந்து வருவது, குழந்தைகளுக்கான உலக பாதுகாப்பு அமைப்புகளை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய போர் 13 நாளைக் கடக்கும் நிலையில், இந்தத் தாக்குதல்களில் 15 நிமிடங்களுக்கு ஒரு குழந்தை பலியாகி வருவதாகக் கவலை தெரிவிக்கிறது அரசு சார்பற்ற சர்வதேச குழந்தைகளுக்கான பாதுகாப்பு அமைப்பு.

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில் 1,400 க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியானார்கள் என்றும், அவர்களில் இதுவரை அறியப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 14 ஆக உள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸால் பிணைக்கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்டவர்களிலும் குழந்தைகள் உள்ளனர். இதற்கு எதிர்வினையாக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதலில் பலியாகும் பாலஸ்தீனர்களில் நாளொன்றிற்கு 100 க்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்து வருவதாக சர்வதுச அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

ஆயுதம் ஏந்திய போருக்கான சர்வதேச விதிமுறைகள், போரில் குழந்தைகள் பாதுக்கப்படுவதும் மனிதநேயத்தோடு நடத்தப்படவும் வேண்டும் என வலியுறுத்துகின்றன. 1951 இல் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இஸ்ரேல், அதற்குச் சில வருடங்கள் முன்புதான் மிகப்பெரிய படுகொலையில் லட்சக்கணக்கிலான யூத குழந்தைகளைப் பலியாகக் கொடுத்திருந்தது.

ஹமாஸை அழிக்கத்தான் இந்தத் தாக்குதல் என இஸ்ரேல் தரப்பில் சொல்லப்பட்டாலும் அப்பாவிப் பொதுமக்களும் இதனால் இறந்து போகின்றனர் என்பதும், அவர்களில் குழந்தைகளும் அடக்கம் என்பதே நிதர்சனம் என குழந்தை நல அமைப்புகள் குரல் கொடுக்கின்றன.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரை - குழந்தைகளுக்கு எதிரான போர் - எனக் குறிப்பிடுகிறார் காஸாவில் பணிபுரியும் பிரித்தானிய மருத்துவர் காஸன் அபு-சிதா.

2008 தொடங்கி இப்பொது ஐந்தாவது முறையாக இஸ்ரேலும் பாலஸ்தானும் போரில் எதிர்கொள்கின்றன. இதனால், போர்ச் சூழலில் வளரும் குழந்தைகள் மனரீதியாக, உணர்வுரீதியாக, பழக்கவழக்க ரீதியாக பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இந்தப் போர் எப்போது முடியும் என்பது தெரியாது. ஆனால், முடியும்போது உயிரோடு இருப்பவர்கள் தங்களின் குடும்ப உறுப்பினர்களை இழந்தும் எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் என்கிறார் அபு-சிதா.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், உடனடியான போர் நிறுத்தமும் வாழ்வாதார உதவிகளுமே குழந்தைகள் மற்றும் அந்த மக்களின் முதன்மையான தேவை. குழந்தை என்பது குழந்தை தான். எல்லா இடங்களில் இருக்கும் குழந்தைகளும் எல்லா நேரமும் பாதுக்கப்பட வேண்டும். தாக்குதலுக்கு ஆளாக அனுமதிக்கக் கூடாது, என வலியுறுத்தியிருக்கிறது. (04)

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்குப் பிணை



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதான அவென்பீல்ட் மற்றும் அல் - அஜீஸியா ஊழல் வழக்குகளில் அவருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் பிணை வழங்க உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, நாடு கடந்து லண்டனில் வசித்து வரும் அவர் பாகிஸ்தான் திரும்புவதற்கு சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது.

பனாமா ஆவண முறைகேடு தொடர்பாக, கடந்த 2017 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் தகுதிநீக்கம் செய்யப்பட்டார். அவருக்கு ஊழல் வழக்குகளில் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் மருத்துவ சிகிச்சைக்காக சிறையிலிருந்து கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டன் சென்ற நவாஸ், பிணைக்காலம் முடிவடைந்த பிறகும் நாடு திரும்பாமல் அங்கேயே வசித்து வருகிறார்.

அப்போது நாட்டின் பிரதமராக இருந்து வந்த இம்ரான் கான், கடந்த 2022 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வியடைந்து ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். அதன்பிறகு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி தலைமையில் புதிய அரசு அமைந்தது. நவாஸ் ஷெரீபின் சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் பிரதமராகப் பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து, நவாஸ் ஷெரீப் இந்த மாதம் நாடு திரும்புவார் என்று கட்சி வட்டாரங்கள் கூறியிருந்தன.

இந்த நிலையில், ஊழல் வழக்குகளில் அவருக்கு இஸ்லாமாபாத் ஊழல் தடுப்பு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. (04)

# ஈரானின் மாஷா அமீனிக்கு ஐரோப்பிய யூனியன் விருது




ஈரானில் கலாசாரக் காவலர்களால் கைது செய்யப்பட்டு சர்ச்சைக்குரிய முறையில் கடந்த ஆண்டு உயிரிழந்த இளம்பெண் மாஷா அமீனிக்கு, ஐரோப்பிய யூனியனின் உயரிய மனித உரிமைகள் விருதான ஷகாரொவ், மரணத்துக்குப் பிறகு வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான இந்த விருதுக்கு, நிகரகுவாவில் மனித உரிமைகளுக்காகப் போராடிய வில்மா நெட்டே எஸ்கார்சியா, கத்தோலிக்க மதகுரு ரொனால்டோ இவாரெஸ் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சோவியத் ரஷ்யாவின் மனித உரிமைப் போராளியான அண்ட்ரேய் ஷகாரொவின் நினைவாக இந்த விருது 1988 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

ஈரானின் சர்ச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கைது செய்யப்பட்ட மாஷா அமீனி என்ற 22 வயதுப் பெண், காவலில் இருந்தபோதே உயிரிழந்தார். குர்து இனத்தைச் சேர்ந்த அந்தப்பெண், தனது உறவினர்களைப் பார்ப்பதற்காக தலைநகர் தெஹ்ரானுக்குச் சென்றருந்தபோது இந்தச் சம்பவம் நடந்தது.

மாஷா அமீனியின் உயிரிழப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈரான் முழுவதும் அரசுக்கு எதிராக தீவிர போராட்டங்கள் நடைபெற்றன. அந்தப் போராட்டங்களை மிகக் கடுமையான முறையில் அடக்கிய ஈரான் அரசு, அப்போது பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. (04)

# பொத்துவில் பிரதேச செயலகத்தின் மூலம் ஹெல்ப் ஏஜ் வழங்கிய வாழ்வாதார உதவி





(எம்.ஏ.றமீஸ்)

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் போன்றோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் அனுசரணையில் பொத்துவில் பிரதேச செயலகத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட குடும்பத்தவர்களுக்கு இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது வருமானம் குறைந்த சுமார் நூறு குடும்பத்தவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த காலத்தில் நிலவிய வறட்சியுடனான காலநிலையின்போது பாதிக்கப்பட்ட குடும்பவத்தவர்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கென ரூபா பத்தாயிரம் பெறுமதியான அத்தியவசியப் பொருட்கள் அடங்கிய உலருணவுப் பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. வறரட்சியான காலநிலையின் போது மக்களுக்கு பெரிதும் பயன்படும் குடிநீரை சேமித்து வைக்கும் இரண்டாயிரம் லீற்றர் கொள்ளவுடைய 10 தண்ணீர்த் தாங்கிகள், குடிநீர் சேமிக்கும் சிறிய ரக தண்ணீர்க் கலன்கள் உள்ளிட்ட உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆத்திமுனை, செங்காமம், கோமாரி ஆகிய பகுதிகளில் வசித்து வரும் விதவைகள், விசேட தேவையுடையோர், முதியோர் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் போன்றோருக்கும் இவ்வுதவிகள் கிடைத்தன.

இந்நிகழ்வின்போது ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டப் பிரதானி எம்.எஸ்.சமிந்த டி சில்வா, நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கேணல் டி.எல்.சரத் சாந்த, கிழக்கு மாகாண நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் தாறுக்க தனஞ்சய பண்டார உள்ளிட்ட பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

# இந்தியாவிலிருந்து 41 தூதர்களை திரும்ப அழைத்துள்ளது கனடா!

இரு நாடுகளுக்கும் இடையே நடந்து வரும் மோதல் காரணமாக இந்தியாவிலிருந்து 41 தூதர்களையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் திரும்பப் பெற்றதாக கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி நேற்று தெரிவித்துள்ளார்.

கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில், இந்திய உளவு அமைப்புகளுக்கு தொடர்பு உள்ளதாக அந் நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த மாதம் பகிரங்கமாக குற்றஞ்சாட்டினார். அத்துடன், இந்திய தூதரக உயரதிகாரி ஒருவரை நாட்டைவிட்டு வெளியேறவும் கனடா அரசு உத்தரவிட்டது. ஆனால், ட்ரூடோவின் குற்றச்சாட்டுகளில் உள்நோக்கம் உள்ளதாக குறிப்பிட்டு, அவற்றை நிராகரித்த இந்தியா, கனடா தூதரக உயரதிகாரி ஒருவரை வெளியேற உத்தரவிட்டது. மேலும், அந்நாட்டினருக்கு வீசா வழங்குவதையும் இந்தியா நிறுத்தியது. இந்த விவகாரத்தால் இருதரப்பு உறவில் கடும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவில் உள்ள கனடா தூதரகத்தில் இருந்து 41 தூதர்களையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் திரும்பப் பெற்றதாக கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலனி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் இந்தியாவிலிருந்து பாதுகாப்பாக புறப்படுவதற்கு தேவையான வசதிகளையும் நாங்கள் செய்துள்ளோம், என்று தெரிவித்துள்ள ஜோலி, இதற்கான அர்த்தம் - எங்களுடைய தூதர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போது தூதரக அலுவலகங்களை விட்டுப் புறப்பட்டுவிட்டனர் என்பதாகும், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தூதரக அதிகாரிகள் எங்கிருந்து வந்தாலும், எங்கு அனுப்பப்பட்டாலும் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். தூதர்கள், தாம் இருக்கும் நாட்டிலிருந்து பழிவாங்கப்படுதல் அல்லது கைது செய்யப்படுவார்கள் என்ற அச்சம் இல்லாமல் தங்கள் வேலையைச் செய்ய சர்வேத சட்டங்கள் அனுமதிக்கின்றன. ஒவ்வொரு நாடும் அந்த விதிகளுக்கு உட்பட்டால் மட்டுமே அவை செயல்படும்.

ராஜதந்திர சிறப்புரிமை மற்றும் விலக்குகளை ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்வது சர்வதேச சட்டத்திற்கு முரணானது. இது தெளிவான சர்வதேசச் சட்ட மீறலாகும்.

கனடாவிற்கு பழிக்குப்பழி வாங்கும் எண்ணம் கிடையாது. கனடா தொடர்ந்து சர்வதேசச் சட்டத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்படும், என்றும் அவர் கூறினார்.

மேலும், இந்தியாவின் முடிவு இரு நாடுகளிலும் உள்ள குடிமக்களுக்கான சேவை வழங்கல் அளவைப் பாதிக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. சண்டிகர், மும்பை மற்றும் பெங்களூருவில் உள்ள எங்கள் தூதரகங்களில் உள்ள அனைத்து தனிப்பட்ட சேவைகளையும் நாங்கள் நிறுத்த வேண்டியது துரதிருஷ்டவசமானது என்றும் அவர் கூறியுள்ளார். (04)



# பலஸ்தீனத் தாக்குதலைக் கண்டித்து மூதூரில் கவனவீர்ப்புப் போராட்டம்



(ஹஸ்பர்)

பலஸ்தீனில் இடம் பெறும் பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்து மூதூரில் இன்று ஜும் ஆ தொழுகையின் பின் அமைதி வழிப் போராட்டமொன்று மணிக்கூட்டு கோபுர சந்தியில் இடம்பெற்றது.

தாக்குதலை நிறுத்தக்கோரியும், சிறுவர்கள் கொல்லப்பட்டமையைக் கண்டித்தும் இக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் பலஸ்தீனியக் கொடியுடன், சிறுவர்கள் கொல்லப்படுவதை நிறுத்து, பயங்கரவாதத்தை ஒழி!, போன்ற வாசகங்களை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜும் ஆ தொழுகையின் பின் இடம்பெற்ற குறித்த அமைதிவழிப் போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் அநேகமான பள்ளி வாயல்களில் விசேட ஜனாசா தொழுகையும், துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றன.

# நாளொன்றுக்கு 200 கோடி வருமானம் இருப்பினும் மின் கட்டணம் அதிகரிப்பு!

## நிதி நிர்வாகமின்மையே காரணம்

இலங்கை மின்சார சபையின் நாளாந்த வருமானம் 200 கோடி ரூபாவை (2 பில்லியன்) தாண்டிய போதிலும், மின்சார சட்ட விதிகளை மீறி இந்த வருடம் மூன்றாவது முறையாக மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன என சிரேஷ்ட பொறியியலாளரொருவர் தென்னிலங்கை ஊடகமொன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மின்சார சபை மாதமொன்றிற்கு ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருமானத்தை ஈட்டும் நிலையில் இதுவரை 1,800 கோடி ரூபாய் நட்டத்தை எதிர்நோக்கியமை எவ்வாறு? என்பது குறித்து நாட்டிற்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் தரவுகளின்படி அனல் மின்சாரத்திற்காக நாளொன்றுக்கு நாற்பது கோடி ரூபாய் (400 மில்லியன்) செலுத்த வேண்டியுள்ளது. அனல் மின்சாரத்திற்காக இவ்வாறு நாற்பது கோடி ரூபா செலவிடப்பட்ட போதும் எஞ்சிய நூற்று அறுபது கோடி ரூபாவை தினசரி வருமானத்தில் நிர்வகிப்பதற்குத் தவறியமை குறித்து ஆராயப்பட வேண்டும் எனவும் குறித்த சிரேஷ்ட பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.


கடந்த ஜனவரி மாதம் முதல் மின்சார சபையின் திறைசேரி நிதி வழங்குவதை நிறுத்திவிட்டதால், மின்சார சபையே வருமானம் மற்றும் செலவுகளை முறையாக நிர்வகிக்க வேண்டும் அப்படியல்லாமல் அந்த நட்டத்தை பாவனையாளர்கள் மீது சுமத்துவது தீர்வாகாது, எனவும் அவர் குறிப்பிட்டார். (ரெ-08)

# மின் கட்டணம் மீண்டும் அதிகரிப்பு உணவுப் பொருள் விலையும் ஏறும்!

மின்கட்டண அதிகரப்பைத் தொடர்ந்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை திருத்துவது குறித்து பரிசீலிக்க உணவகங்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

மின்சாரக் கட்டண திருத்தத்தின் மூலம் தமது உற்பத்திகளின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுள்ளதாகத் தெரிவித்துள்ள அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான், கலந்துரையாடலுக்கு பிறகு, விலைத் திருத்தம் பற்றி அறிவிக்கப்படும் என கூறியுள்ளார்.

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வித்தியாரம்ப விழா




(வி.ரி.சகாதேவராஜா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார கற்கைகள் நிறுவகத்தின் அம்பாறை மாவட்ட காரைதீவு சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் பயிற்சி நெறிகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 க்கு காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

யோகாசனம், பண்ணிசை, பரதநாட்டியம் ஆகிய கலைகளுக்கான பயிலுனர்களை இணைத்துக் கொள்ளும் வித்தியாரம்ப நிகழ்வுகள் அன்றைய தினம் நடைபெறவிருக்கின்றன.

# 'சிபெட்கோ'எரிபொருள் விற்பனை 20 வீத வீழ்ச்சியில் வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களே காரணமாம்!

## எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சிபெட்கோ எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விற்பனை சுமார் இருபது வீதத்தால் குறைந்துள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் கூறுகிறது.

வியாபாரப் போட்டி நிலையை உருவாக்குவதாகக் கூறி, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கையில் எரிபொருள் சந்தை திறக்கப்பட்டதையடுத்து குறிப்பிட்ட ஒரு நிறுவனம் எரிபொருளின் விலையை ஒரு லீற்றருக்கு ஏழு ரூபாவால் குறைத்து விற்பனை செய்து வருவதாக மேற்படி சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சும் விரும்பினால், ஒரு லீற்றர் 'சிபெட்கோ'எரிபொருளின் விலையை ஏழு ரூபாவால் குறைக்க முடியும், எனவும் அவர் தெரிவித்தார். ஆனால், சிபெட்கோ நிறுவனம் பழைய கடன்களை செலுத்த வேண்டியிருப்பதால் எரிபொருளின் விலை ஒரு சதத்தால் கூட குறைக்கப்பட மாட்டாது என அமைச்சு அறிவித்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதன் காரணமாக, நாடு முழுவதும் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிலையங்களின் விற்பனை குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், நாட்டில் ஆயிரத்து ஐம்பது சிபெட்கோ எரிவாயு நிலையங்கள் உள்ளன, இந்தியன் ஒயில் நிறுவனம் இருநூற்றி எண்பது எரிபொருள் நிலையங்களைக் கொண்டுள்ளது, சீன சினோபெக் நிறுவனம் நூற்று ஐம்பது எரிபொருள் நிலையங்களை வைத்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால் 'சிபெட்கோ' எரிபொருள் நிலையங்களை மூடவேண்டிய நிலையே ஏற்படும் எனவும் கூறினார்.

இதேவேளை, சிபெட்கோ எரிபொருளின் விலையை கட்டுப்படுத்தும் உரிமையை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்குமாறு, எரிசக்தி அமைச்சிடம், கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாகவும், எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் தற்போது எரிசக்தி அமைச்சிடமே உள்ளது எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். (ரெ-09)

# கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் புதிய பணிப்பாளராக என்.எம்.நௌபீஸ் இன்று கடமையேற்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவின் புதிய பணிப்பாளராக என்.எம்.நௌபீஸ் திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் வைத்து இன்று கடமையினை பொறுப்பேற்றார்.

குறித்த நியமனக் கடிதத்தை மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க கடந்த 12 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்திருந்தார். கிழக்கு மாகாண ஆளுனரினால் குறித்த பதவிக்கான நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை நிருவாக சேவை அதிகாரியான இவர் மாகாண விளையாட்டு பணிப்பாளர், கிண்ணியா ஏறாவூர் நகர சபைகளின் செயலாளராகவும் சிறுகைத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் ஆகிய பதவிகளில் முன்னர் திறம்பட கடமையாற்றியுள்ளார். அத்துடன், பொதுத் துறை நிருவாகத்தில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்றிருப்பதோடு, இளமாணி கற்கையினையும் பூர்த்தி செய்துள்ளார்.



மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரை சேர்ந்த இவர் அரச திணைக்களங்களின் உயர் பதவிகளில் தனது நிருவாக சேவைகளை திறம்பட செய்துள்ளார். இக்கடமை பொறுப்பேற்பு நிகழ்வில் பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# முதன் முறையாக யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொள்ளும் ஆதிவாசிகள்



வரலாற்றில் முதன்முறையாக மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் யாழ்ப்பாணத்திற்கு நாளை விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோவின் தலைமையிலான 60 பேரைக் கொண்ட ஆதிவாசிகள் குழுவினரே நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்திற்குச் சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இடங்களை பார்வையிடுவதற்காக இந்தச் சுற்றுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2023இல் வெளியிடப்பெற்றது.